தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொடைக்கானலில் மழை: அருவிகளில் நீர்வரத்து அதிகரிப்பு

கொடைக்கானலில் பெய்து வரும் மழையால் அருவிகளில் நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. கொடைக்கானலில் சில தினங்களாக மாலை நேரங்களில் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. இந் நிலையில் கடந்த இரண்டு நாள்களாக பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இந்த மழையால் கொடைக்கானலில் உள்ள நீர்வரத்து பகுதிகளான வெள்ளிநீர் வீழ்ச்சி, வட்டக்கானல் அருவி, பாம்பார் அருவி, செண்பகா அருவி, பியர்சோழா அருவி, பேரிபால்ஸ் உள்ளிட்ட நீர்வரத்து பகுதிகளில் தண்ணீர்வரத்து கூடுதலாக காணப்படுகிறது. இரண்டு நாள்களாக சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரித்திருந்தது. தொடர்ந்து பெய்து வரும் மழையால் குளுமை அதிகம் காணப்படுகிறது. இந்நிலையில் சனிக்கிழமை நிலவிய பதற்றம் தணிந்து இயல்பு நிலை திரும்பியது. கடைகள், உணவு விடுதிகள் அனைத்தும் திறந்திருந்தன.

## தமிழகத்தில் மழை வாய்ப்பு

குமரிக்கடல் பகுதியில் காற்று மேலடுக்கு சுழற்சி ஏற்பட்டுள்ளதால் தமிழகத்தின் சில இடங்களில் திங்கள்கிழமை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து ஆய்வு மைய அதிகாரிகள் கூறியபோது, குமரிக் கடல் பகுதியில் வளி மண்டல மேலடுக்கு காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தின் பல இடங்களில் மழை பெய்யும். இதில் உள்மாவட்டங் களின் பல இடங்களில் கனமழை பெய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திண்டுக்கல் பகுதியில் 5 ஆவது நாளாக பலத்த மழை

திண்டுக்கல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில், தொடர்ந்து 5ஆவது நாளாக பலத்த மழை பெய்ததால், பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில், கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக போதிய மழையில்லாததால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, பல இடங்களில் குடிநீர் பிரச்னை அதிகரித்து வந்தது. கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்ததால், மாவட்டத்தில் உள்ள 91ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிணறுகள் வறண்டன. இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மாவட்டத்தின் பல இடங்களிலும் மிதமான மழையும், சில பகுதிகளில் பலத்த மழையும் பெய்து வருவது, விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை முதல், திண்டுக்கல், வேடசந்தூர், சாணார்பட்டி, சிறுமலை, கொடைரோடு, செம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து பெய்து வரும் இந்த மழையால், நிலத்தடி நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளது. அதேபோல், திண்டுக்கல் நகருக்கு பிரதான குடிநீர் ஆதாரமாக விளங்கும் ஆத்தூர் அணைக்கு, நீர் வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

## மேகமலை பகுதியில் மழை: அருவியில் நீர்வரத்து அதிகரிப்பு

மேகமலை பகுதியில் சாரல் மழை பெய்து வருவதால் சின்ன சுருளி அருவியில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் சுற்றுலாப்பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தேனி மாவட்டம் கடமலைக்குண்டு அருகே சின்ன சுருளி நீர் வீழ்ச்சி உள்ளது. மேகமலை பகுதியில் உற்பத்தியாகி, மலைப்பகுதியில் உள்ள பல்வேறு அறியவகை மூலிகைகள் கலந்து வருவதால் இந்த அருவி நோய்கள் தீர்க்கும் அருவியாகவும் விளங்கிவருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் மேகமலை பகுதியில் மழை இல்லாததால் நீர் வரத்து இல்லாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த சில நாள்களாக பெய்த சாரல் மழையால் அருவியில் நீர் வரத்து

ஏற்பட்டது. தற்போது நல்ல மழை பெய்து வருவதால் அருவியில் நீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. இதுகுறித்து சுற்றுலாப் பயணி பாஸ்கரசேதுபதி கூறியது: தற்போது மேகமலை அருவிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. ஊராட்சி நிர்வாகம் மற்றும் வனத்துறையினர் சுற்றுலாப்பயணிகளுக்கு பல்வேறு வசதிகளை செய்துதர வேண்டும். மேலும் நீர் வீழ்ச்சிக்கு பேருந்து வசதிகளை ஏற்படுத்தினால் சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகரிக்கும் என்றார்.

## <u>ராஜபாளையத்துக்கு ஆப்பிள் வரத்து அதிகரிப்பு</u>

ராஜபாளையம் பகுதிக்கு ஆப்பிள் வரத்து அதிகமிருந்தாலும் விலையும் அதிகமாக உள்ளது. கடந்த ஆண்டு சீசனில் ராஜபாளையம் பகுதிக்கு காஷ்மீர், ஸ்ரீநகர், ஜம்மு பகுதியில் இருந்து அதிகளவில் ஆப்பிள் வரத்து அதிகம் இருந்தது. இதில் பெரிய ஆப்பிள் பழங்கள் அதிகளவில் வந்தன. விலையும் மிக குறைவாக இருந்தது. தரமான ஆப்பிள் கடந்த ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் கிலோ ரூ.70க்கு கிடைத்தது. இந்த ஆண்டு சீசனில் தற்போது ஆப்பிள் பழம் அதிகளவில் வந்தாலும் அளவில் சிறிதாகவே உள்ளன. இந்த பழங்கள் தான் அதிகளவில் விற்பனைக்கு வருகின்றன. கிலோ ரூ.90 முதல் ரூ.120 வரை தரம் வாரியாக விற்பனை செய்யப்படுகிறது. இந்த ஆண்டு பருமனான முதல் மற்றும் 2ஆம் ரக ஆப்பிள் வெளிநாடுகளுக்கு அதிகளவில் ஏற்றுமதியாவதால் இதற்கு அடுத்த ரக ஆப்பிள் பழங்களே இப் பகுதிக்கு விற்பனைக்கு வருகின்றன. இவையும் தரம் பிரித்து விலை வைத்து விற்கப்படுகிறது. இந்த ஆண்டு மாதுளம்பழம் விளைச்சல் அதிகரித்து அதிகளவில் விற்பனைக்கு வருவதால் இப்பழம் கிலோ ரூ.70க்கு விற்பனையாகிறது. இரு மாதங்களுக்கு முன் மாதுளம்பழம் கிலோ ரூ.130க்கு விற்றது குறிப்பிடத்தக்கது.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மீண்டும் அதிகரிப்பு

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 34,661 கன அடியாக அதிகரித்தது. காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் சனிக்கிழமை இரவு மீண்டும் மழை பெய்தது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 34,661 கன அடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் 91.07 அடியாக உயர்ந்தது. அணையில் இருந்து பாசனத்துக்கு நொடிக்கு 18,594 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 53.88 டி.எம்.சி.யாக இருந்தது.

## கரூரில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர் மாவட்டத்தில் காவிரி நீர் பாசன பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகள் அனைத்தும் வானம் பார்த்த பூமியாகத்தான் உள்ளது. கடந்த மூன்றாண்டுகளாக ஏற்பட்ட கடும் வறட்சியினாலும், அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கப்படாததாலும் விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு கூட தண்ணீர் கிடைக்காத நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்நிலையில் நிகழாண்டில் தென்மேற்கு பருவமழையும் கைகொடுக்கவில்லை. இதனிடையே தற்போது தொடங்கியுள்ள வடகிழக்குப் பருவமழையாவது விவசாயிகளுக்கு கைகொடுக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனிடையே கரூரில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பிற்பகல் 3.30 மணிவரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்நிலையில் 3.40 மணிக்கு திடீரென பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. சுமார் 4 மணி வரை பெய்த மழையால் ஆங்காங்கே பள்ளங்களில் மழை நீர் தேங்கியது. இதையடுத்து மீண்டும் இரவு 7 மணிக்கு தொடங்கிய மழை இரவு 8 மணி வரை நீடித்தது. இதன்பிறகும் மழை விட்டு விட்டு தொடர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். இதுதொடர்பாக நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்க செயலாளர் ராமலிங்கம்

கூறுகையில், அமராவதி ஆற்றில் தண்ணீர் கொண்டு வருவதற்கு படாத பாடு பட்டுவிட்டோம். அணையில் திறக்கப்பட்ட தண்ணீர் ஆறு நாட்களுக்கு பிறகுதான் கரூருக்கே வந்துள்ளது. இருப்பினும் ஆற்றில் தண்ணீர் வந்துள்ள நிலையில் மழையும் பெய்துவருவது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கோவைக்கு பருவமழை கைகொடுத்ததால் துளிரும் நம்பிக்கை!</u>**

**<u>சாகுபடியில் களமிறங்கிய விவசாயிகள்</u>**




கோவை : பருவமழை பொய்த்து போனதால், கடந்த சில ஆண்டுகளாக, விவசாயிகள் காய்கறி மற்றும் பயிர் சாகுபடியை கைவிட்டிருந்தனர். இந்தாண்டு, தென்மேற்கு பருவமழை கைகொடுத்ததால், சாகுபடியில் விவசாயிகள் களமிறங்கியுள்ளனர். கோவை மாவட்டம் தொழில்துறைக்கு மட்டுமின்றி, விவசாயத்திற்கும் புகழ் பெற்றது. நவதானியங்கள், காய்கறி சாகுபடியில் முதலிடத்தில் இருந்த கோவை மாவட்டத்தில், தற்போது நீண்ட கால பயிரான தென்னை சாகுபடி மட்டுமே நிலைத்து நிற்கிறது. சோளம், கம்பு, ராகி, தினை, சாமை, குதிரைவாலி, உளுந்து, தட்டை, கொள்ளு, நெல், பாசிப்பயறு, மொச்சை போன்ற தானியம், பயிறு வகைகளும், கத்தரி, வெண்டை, அவரை, கொத்தவரை, பீன்ஸ், பீட்ரூட்,

முள்ளங்கி, வெங்காயம், பூசணி, அரசாணி, தக்காளி போன்றவை சாகுபடி பரப்பு கொஞ்சம் கொஞ்சமாக சுருக்கி, அரிதாகி விட்டது. நவதானியம், பயிறு, காய்கறி சாகுபடி தேவைக்கேற்ப இல்லாததால், வேறு மாவட்டத்தில் இருந்து, கோவை மார்க்கெட்டுகளுக்கு வரவழைக்கப்பட்டு, விற்கப்படுகின்றன. மக்கள் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், விவசாய பொருட்கள் உற்பத்தி இல்லாததால், விலையும் கட்டுக்கடங்காமல் உள்ளது. இந்நிலையில், கடந்த நான்கு ஆண்டுகளாக தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையும் பொய்த்து போனதால், நிலத்தடி நீர்மட்டம் அதல பாதாளத்துக்கு சென்றது. கிணற்று பாசனத்தை நம்பியிருந்த விவசாயிகள் சாகுபடி செய்வதை கைவிட்டு, தென்னை மரங்களை காப்பாற்றக்கூட தண்ணீர் கிடைக்காமல் அவதிக்குள்ளாயினர்.மழையை நம்பி, மானாவாரி நிலத்தில் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள், நிலத்தை உழுதே மூன்றாண்டுகளுக்கு மேலாகி விட்டது. கிணற்றுப்பாசன விவசாயிகள், ஒருசில இடங்களில் சொட்டுநீர், நுண்ணீர் பாசன முறையில், சாகுபடி செய்து, மக்களுக்கு தேவையான காய்கறிகளை மட்டும் உற்பத்தி செய்கின்றனர். பந்தல் காய்கறி சாகுபடி விவசாயிகள் பாகற்காய், புடலை, பீர்க்கன் ஆகிய வீரிய ரக காய்கறிகளை உற்பத்தி செய்வதால், விலை நிலவரம் ஓரளவுக்கு கட்டுக்குள் உள்ளது. மழையின்மையால், தேங்காய் உற்பத்தியும் பாதித்து, விலை அதிகரித்துள்ளது.இந்நிலையில், கோவை மாவட்டத்தில், ஜூன் மாதம் முதல், பரவலாக மழை பெய்து வருகிறது. கோவையின் தெற்கு, மேற்கு பகுதிகளில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி, மழை பொழிவு அதிகம் உள்ளதால், கிணறுகள், ஆழ்குழாய்கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. நீர் ஆதாரங்கள் திருப்திகரமாக உள்ளதால், விவசாயிகள் முன்பு போன்று, பயிர், காய்கறி சாகுபடியில் களமிறங்கியுள்ளனர்.

**தீராதசோதனை!**

கோவையில் பயிர், காய்கறி சாகுபடியை விவசாயிகள் கைவிட்டதற்கு, மயில், காட்டுப்பன்றி, பச்சைக்கிளிகளும் முக்கிய காரணம். அறுவடை நிலையில் உள்ள பயிர் மற்றும் காய்கறியை, வனவிலங்குகள் சேதப்படுத்தி விடுகின்றன. அவற்றை விவசாயிகளால் கட்டுப்படுத்த முடியவில்லை.வனத்துறை, வேளாண் துறை அதிகாரிகள் இந்த பிரச்னையில் கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டும். அதேபோன்று, தனியார் டிராக்டர், பவர் டிரில்லர், ரெட்டாவேட்டர், டிஸ்க் போன்ற உளவு கருவிகளின் வாடகை அதிகம் உள்ளது.வேளாண் பொறியியல் துறை மூலம், உளவு உபகரணங்களை அதிகம் வாங்கி, குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்பது விவசாயிகளின் வேண்டுகோள். **'சந்தைவாய்ப்பு வேண்டும்'** விவசாயிகள் கூறுகையில், 'மழை பெய்துள்ளதால், நம்பிக்கையுடன் பயிர், தானியங்கள், காய்கறி சாகுபடியில் ஈடுபட்டுள்ளோம். தக்காளி, வெண்டை, கத்தரி, பருத்தி, சோளம்,மக்காச்சோளம், உளுந்து, தட்டை, வாழை, பீன்ஸ், கொடி அவரை சாகுபடி செய்துள்ளோம். எந்தளவுக்கு நம்பிக்கையுடன் விவசாயத்தில் ஈடுபடுகிறோமோ, அந்தளவுக்கு விலையும் கிடைத்தால் தான், சாகுபடியில் தொடர்ந்து ஈடுபட முடியும். கடந்த நான்கு நாட்களாக இரண்டாம் சுற்று மழை பெய்வதால், நல்ல மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.இந்தாண்டு கால்நடை தீவனம், பயிர், காய்கறி உற்பத்தியில் சிக்கல் இருக்காது. சந்தை நிலவரத்தையும் கட்டுக்குள்வைத்திருக்க, சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

**வேளாண் பொருட்கள் இறக்குமதி:கனடாவுக்கு அமைச்சர் கோரிக்கை**

புதுடில்லி:இந்திய வேளாண் பொருட்களை அதிகளவில் இறக்குமதி செய்ய வேண்டும் என, கனடாவுக்கு, மத்திய வேளாண் அமைச்சர் ராதா மோகன் கோரிக்கை விடுத்தார். கனடா – இந்திய நாடுகளுக்கிடையி-

லான வர்த்தகத்தில், சமநிலை இல்லாத சூழல் நிலவி வருகிறது. இதை தவிர்க்கும் வகையில், தக்காளி மற்றும் திராட்சை உள்ளிட்ட இந்திய வேளாண் பொருட்களை, கனடா, அதிகளவில் இறக்குமதி செய்ய வேண்டும். கனட நாட்டு முதலீட்டாளர்கள்,குளிர் சேமிப்பு கிடங்கு கட்ட-மைப்புகள், தொழில்நுட்பம் சார்ந்த பிரிவுகளில் முதலீட்டை அதிகரிக்க வேண்டும் என, அமைச்சர் மேலும் கேட்டுக் கொண்டார்.

<u>**மலைபகுதிகளில் தொடர் மழை; அணைகளில் நீர் மட்டம் உயர்வு**</u>

பழநி : கொடைக்கானலில் பெய்து வரும் தொடர் மழையால் பழநி வரதமாநதி, பாலாறு-பொருந்தலாறு, குதிரையாறு அணைகளுக்கு வரும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. கடந்த சிலமாதங்களாக போதிய மழையில்லாததால், நீர்வரத்து இல்லாமல் பழநி வரதமாநதி, பாலாறு-பொருந்தலாறு, குதிரையாறு அணைகளின் நீர்மட்டம் குறைந்து கொண்டே வந்தது. தற்போது, கொடைக்கானல் மலைப்பகுதியில் மழைபெய்துவருவதால், பாலாறு-பொருந்தலாறு அணைக்கு வினாடிக்கு 155 கனஅடி தண்ணீர் வரத்துவங்கியுள்ளது. வரதமாநதி அணைக்கு 23 கனஅடியும், குதிரையாறு அணைக்கு 3 கனஅடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து மழை பெய்ய வேண்டுமென்பதே அனைத்து தரப்பினரின் எதிர்பார்ப்பாக உள்ளது. தற்போதைய நிலவரம்: வரதமாநதி அணையிலிருந்து 2 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. தற்போது அணையில் 54.5 அடி தண்ணீர் உள்ளது. மொத்த அளவு 67 அடியாகும். பாலாறுபொருந்தலாறு அணையிலிருந்து 7 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. தற்போதைய நீர்மட்டம் 33 அடியாக உள்ளது. மொத்த அளவு 65 அடியாகும். குதிரையாறு அணையிலிருந்து வினாடிக்கு 3 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 30.79 அடியாக உள்ளது. மொத்த அளவு 80 அடியாகும்.

**<u>மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி; குடிநீர் பிரச்னைக்கு தற்காலிக தீர்வு</u>**

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில் மூன்று நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பல்வேறு பகுதியில் ஏற்பட்டிருந்த குடிநீர் பிரச்னைக்கும் தற்காலிக தீர்வு ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தின் சராசரி மழையளவு 832 மி.மீ., என அளவிடப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த அளவு பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால் விளை நிலங்கள் அனைத்தும் தரிசானது. விவசாயிகளுக்கு வாழ்வளித்து வந்த தென்னைகளும் கருகின. விவசாயிகளில் பலர், வேலைதேடி தஞ்சாவூர், திருப்பூருக்கு சென்றனர்.சிக்கல்: பருவமழையும் தொடர்ந்து பொய்த்ததால் குளங்கள், கண்மாய்கள் வறண்டன. கடந்த மாதம் 25 சதவீத பாசனக் கிணறுகளில் மட்டுமே தண்ணீர் இருந்தது. மற்ற கிணறுகள் பயனில்லாமல் இருந்து வந்தன. பல கிராமங்களில் உள்ள மக்கள் குடிநீருக்காக அலையும் நிலை ஏற்பட்டது. ரோடு மறியல் போராட்டங்கள் தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டன. தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் வறண்ட நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கண்மாய், குளங்கள், கிணறுகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பல இடங்களில் உழவு பணி துவக்கப்பட்டுள்ளது. குடிநீருக்கும் தற்காலிக தீர்வு கிடைத்துள்ளது.

நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த மழை அளவு விபரம்(மி.மீ.,) வருமாறு: திண்டுக்கல் -15.92, வேடசந்தூர்-16, புகையிலை ஆராய்ச்சி நிலையம்-21.2, கொடைக்கானல் போட் கிளப்-34, கொடைக்கானல் அப்சர்வேட்டரி- 23.1 ல் மழை பதிவாகியிருந்தது. தற்போது பெய்துள்ள மழையினால் உழவு பணி மட்டுமே செய்ய முடியும் என்பதால் கனமழையை எதிர்பார்த்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## காய்கறிகள் விற்பனை அதிகரிப்பு

பழநி : புரட்டாசி மாதம் என்பதால், காய்கறி வாங்குபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக, சந்தையில் காய்கறிகளின் விற்பனை சூடுபிடித்துள்ளது. தமிழ் மாதமான புரட்டாசியில் பெரும்பாலானவர்கள் அசைவத்தை உட்கொள்வதில்லை. காய்கறிகளுக்கே முக்கியத்துவம் அளிப்பர் என்பதால் வாரச்சந்தை மற்றும் உழவர் சந்தைகளில் விற்பனை அதிகரித்துள்ளது. தேவைக்கேற்ப, காய்கறிகளின் வரத்து இல்லாததால் விலை உயர்ந்துள்ளது. உழவர்சந்தைகளில் பகல் 12 மணி வரை விற்பனை நடைபெறும். புரட்டாசி துவங்கியதிலிருந்து காலை 8 மணிக்கே விற்பனை முடிந்து விடுகிறது. காய்கறிகளின் விலை நிலவரம் வருமாறு: தக்காளி முதல் ரகம் கிலோ ரூ.14, அவரை ரூ.20, கோஸ் ரூ.20, கேரட் ரூ. 46, உரு ளை 40, வெங்காயம் 30, பெல்லாரி 25, முருங்கை 30, கத்திரி 18, வெண்டை 12, பீட்ரூட் 24 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. உழவர் சந்தை அதிகாரி ஒருவர் கூறுகையில், "புரட்டாசி முதல் நாளிலிருந்து சந்தையில் கூட்டம் அதிகரித்துள்ளது. போதிய விளைச்சல் இல்லாததால் சந்தைக்கு வரும் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. தினமும் 15 டன் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்படும். தற்போது, 13 டன் மட்டுமே வருகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் உழவு பணிகளில் கவனம் செலுத்த துவங்கியுள்ளனர். இதனால், அவர்களின் எண்ணிக்கையும் குறையத்துவங்கியுள்ளது. கேரட், உருளை, சோயா, பட்டர்பீன்ஸ் காய்களின் விலை அதிகரித்துள்ளது,' என்றார்.

## தூத்துக்குடியில் நீண்ட நாட்களுக்கு பின்பு இடியுடன் கனமழை

தூத்துக்குடி: தூத்துக்குடியில் நீண்ட நாட்களுக்கு பின்பு இடியுடன் கன மழை பெய்துள்ளது. பூமி குளிர்ந்ததால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டியில் அதிக அளவு மழை பெய்துள்ளது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் மழை பெய்திருந்தாலும், தூத்துக்குடி டவுன் பகுதியில் மழை பெய்யவில்லை. கடுமையான வெயில் காரணமாக மக்கள் வெப்பத்தை சகிக்க முடியாத நிலையில் இருந்து வந்தனர். இந் நிலையில் நேற்று காலை 8 மணிக்கு பலத்த இடி, மின்னலுடன் கனமழை பெய்ய துவங்கியது. இடி இடிக்கும் சத்தம் மிகவும் கடுமையாக இருந்ததால், மக்கள் வீடுகளை விட்டு வெளியேறாமல் பயத்தில் உறைந்து போயிருந்தனர். இது நாள் வரை வெப்பத்தை மட்டுமே பார்த்து வந்த தூத்துக்குடியில், மழை காரணமாக பூமி குளிர்ச்சியடைந்தது. தற்போது குளிர்ந்த காற்று வீசுவதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பகல் முழுவதும் வெயில் அடித்தாலும், குளிர்ந்த காற்று காரணமாக வெப்பத்தின் தாக்கம் தெரியவில்லை. நீண்ட நாட்களுக்குப்பின் தூத்துக்குடியில் மழை பெய்திருப்பதால் அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>2500 மூட்டை பருத்தி 33 லட்சத்திற்கு விற்பனை</u>**



இடைப்பாடி: சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்தில் உள்ள வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நேற்று முன்தினம் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். பருத்தியை கொள்முதல் செய்ய பல்வேறு பகுதிகளில் இருந்து மொத்த வியாபாரிகளும் வந்தனர். பருத்தியை பார்வையிட்ட வியாபாரிகள் அவற்றை விலை பேசி கொள்முதல் செய்தனர். 2,500 மூட்டை விற்பனையானது. இதில், பிடி ரகம் குவிண்டால் ^3,900 முதல் ^4,710 வரை விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் ^33 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>புலிவலத்தில் 50 மி.மீ மழை</u>**

திருச்சி, : திருச்சி மாவட்டம் புலிவலத்தில் 50 மி.மீ மழை பெய்தது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மாலை மற்றும் இரவு நேரங்களில் பரவலாக மழை பெய்கிறது. திருச்சி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலையில் திடீர் என மழை பெய்யத் துவங்கியது. இந்த மழை கொஞ்சம் நேரம் கூட நீடிக்கவில்லை. பின்னர் நேற்று அதிகாலை லேசான மழை பெய்தது.திருச்சி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு (மி.மீட்டரில்): முசிறி 20, தா.பேட்டை 15, துறையூர் 15, மருங்காபுரி 7.20, நவலுஜிர் குட்டப்பட்டு 7, வாத்தலை அணைக்கட்டு 5.70, சமயபுரம் 19, தேவிமங்கலம் 24.80, சிறுகுடி 47, புலிவலம் 50. மொத்தம் 210 மி.மீ. சராசரி 8.78 மி.மீ.

**<u>கான்டூர் கால்வாயிலிருந்து பாலாற்றிற்கு தண்ணீர் திறப்பு</u>**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த அர்த்தநாரிபாளையம், எஸ்.நல்லூர், உடுமலை தாலுகாவிற்குட்பட்ட தேவனூர்புதூர், ராவணாபுரம், செல்லப்பம்பாளையம், புங்கமுத்தூர் ஆகிய ஊராட்சிகளில்

உள்ள கிராமங்களுக்கு, அந்த வழியாக செல்லும் பாலாற்றில் இருந்து குடிநீர் தேவைக்கும், விவசாயத்துக்கும் தண்ணீர் எடுக்கப்படுகிறது. ஆனால் கடந்த சில மாதங்களாக மேற்கண்ட கிராமங்களுக்கு தேவையான தண்ணீர் இல்லாததால் அப்பகுதி மக்கள் தவித்தனர். இந்நிலையில், திருமூர்த்தி அணைக்கு செல்லும் கான்டூர் கால்வாயின் ஒரு பகுதியான நல்லார் ஷட்டர் வழியாக, பாலாற்றில் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால், கிராம மக்களின் கோரிக்கையை பொதுப்பணித் துறை அதிகாரிகள் நிராகரித்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, அப்பகுதி கிராம மக்கள் நேற்று முன்தினம், பொள்ளாச்சி உடுமலை ரோட்டில் உள்ள பிஏபி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து அங்கு வந்த சப் கலெக்டர் ரஷ்மிசித்தார் ஜெகடே, கான்டூர் கால்வாயிலிருந்து பாலாற்றிற்கு தண்ணீர் உடனடியாக திறக்கப்படும் என்று உறுதி கூறியதை அடுத்து பொதுமக்கள் முற்றுகையை கைவிட்டு கலைந்து சென்ற னர். அதன்படி நேற்று காலை கான்டூர் கால்வாய் நல்லார் ஷட்டர் வழியாக பாலாற்றிக்கு வினாடிக்கு 60 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் திறப்பு வரும் அக்டோபர் 1ம் தேதி வரை தொடர்ந்து 6 நாட்களுக்கு இருக்கும் என்றும், மொத்தம் 31.10 மி.கன அடி தண்ணீர் திறக்கப்படும் என்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். போராட்டத்திற்கு பிறகு, பாலாற்றில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**கரூர் மாவட்டத்தில் இடியுடன் பலத்த மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

கரூர், : கரூர் மாவட்டத்தில் நேற்று மீண்டும் நல்ல மழை பெய்தது. கடந்த சில மாதங்களாக கரூர் மாவட்டத்தில் மழை லேசாக தூறியவண்ணம் இருந்தது. பகலில் வெயில் கொளுத்திவந்த நிலையில் கடந்த 24ம்தேதி பரவலாக மழைபொழிந்துள்ளது. மாவட்டத்தில் அதிகபட்ச அளவாக மயிலம்பட்டியில் 75.20மிமீ மழை பொழிந்துள்ளது.

மேலும் அரவக்குறிச்சி 10, கபரமத்தி 12.40, மாயனூர் 4.06, கரூர் 12, அணைப்பாளையம் 37.20, தோகமலை 13.30, பஞ்சப்பட்டி 28, பாலவிடுதி 26.30, கடவூர் 42.50, கிருஷ்ணராயபுரம் 2, சராசரி மழை அளவு 21.91 மிமீ. மழைபெய்தது. பின்னர் மழையில்லாத நிலையில் அவ்வப்போது லேசானதூறல் மட்டுமே விழுந்தது. இந்நிலையில் நேற்று மாலை மீண்டும் இடியுடன் மழைபெய்தது. இரவு வரை அவ்வப்போது விட்டுவிட்டு மழை தூறிக்கொண்டே இருந்தது. தொடர்ந்து மழைபெய்தால் பாசனத்திற்கு உபயோகமாக இருக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். க.பரமத்தி:க.பரமத்தி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இந்நிலையில் நேற்று காலை முதல் மாலை வரை வெயில் வாட்டி எடுத்தது. பின்னர் மாலையில் திடீரென குளிர்ந்த காற்று வீசியதோடு, 1 மணிநேரம் பலத்த மழை பெய்தது. திடீரென பெய்த மழையால் க.பரமத்தியில் இருந்து பல்வேறு கிராமங்களுக்கு செல்லும் சாலைகளில் வெ ள்ளநீர் பெருக்கெடுத்து ஓ டியது. தாழ்வான பகுதிகளி ல் மழைநீர் தேங்கியதால் சைக்கிள் மற்றும் டூவீலரில் சென்ற பலரும் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். தற்போது பெய்த மழையால் மானாவாரி பயிர்களான சோளம், கம்பு உள்ளிட்ட பயிர்கள் செழித்து வளர பேருதவியாக இருப்பதுடன், நிலத்தடி நீர் மட்டமும் உயரும் வாய்பபுள்ளது என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

**<u>டிசம்பருக்குபின் விலை ஏற்றம் இல்லை சின்ன வெங்காயத்தை இருப்பு வைக்காமல் விற்க பரிந்துரை</u>**

திருச்சி, : டிசம்பர் மாதத்திற்கு பின் விலையேற வாய்ப்பு இல்லாததால் அறுவடை சின்ன வெங்காயத்தை உடனே விற்க பரிந்துரை செய்யப்படுகிறது. 2013-14ல் தமிழ்நாட்டில் வெங்காய சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 0.39 லட்சம் எக்டார் மற்றும் 4.73 லட்சம் டன் கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவின் மொத்த வெங்காய

சாகுபடி பரப்பில் தமிழ்நாடு 5 சதவீத பங்களிப்பும், சின்ன வெங்காய சாகுபடி பரப்பில் 70 சதவீதமாகவும் உள்ளது. தற்போது கரூர், திண்டுக்கல், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இருந்து வரத்து உள்ளது. கடந்த ஏப்ரல் முதல் ஜுன் 2014 வரை நல்ல தரமான சின்ன வெங்காயத்தின் விலை கிலோவிற்கு ரூ.22வரை மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. இவ்விலை குறைவிற்கான காரணம் சந்தைக்கு கர்நாடகாவில் இருந்து வரும் வரத்து அதிகரித்தாலும், தமிழ்நாட்டில் இருப்பு வெங்காயத்தின் வரத்து அதிகரித்ததே ஆகும். தற்போது நல்ல தரமான சின்ன வெங்காயம் கிலோவிற்கு ரூ.25 முதல் ரூ.40 வரை திண்டுக்கல் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு காரணம் கர்நாடாகவில் இருந்து வரும் வரத்து அறுவடையின்போது பெய்த கனமழையால், ஆகஸ்டு மாதம் தொடக்கத்திலே முடிவடைந்தது. வர்த்தக ஆய்வின்படி, புரட்டாசி பட்ட விதைப்பிற்கு தேவையான விதைப்பு சின்ன வெங்காயத்தின் தேவை மற்றும் வரும் மாதங்களில் பண்டிகை மற்றும் தேவை அதிகரிப்பால் சின்ன வெங்காயத்தின் விலை செப்டம் பர் முதல் நவம்பர் வரை ஏற்றத்துடன் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில், விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 16 வருடமாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலையை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மைய அலுவலகம் ஆராய்ந்தது. பொருளியல் ஆய்வுகள் அடிப்படையில், தரமான சின்ன வெங்காயத்தின் விலை அக்டோபர், நவம்பர் மாதங்களில் கிலோவிற்கு ரூ.30 முதல் ரூ.35 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் சின்ன வெங்காயத்தின் ஏற்றுமதி தேவையானாலும் விலை உயர வாய்ப்புள்ளது. டிசம்பர் மாதத்திற்கு பிறகு விலையேற வாய்ப்பில்லாத

தால், விவசாயிகள் அறுவடை செய்த சின்ன வெங்காயத்தை இருப்பு வைக்காமல் உடனே விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர் என தெரிவித்தார்.

**<u>வரத்து குறைவால் வெற்றிலை விலை உயர்வு</u>**

கரூர், : வரத்து குறைவின் காரணமாக வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. கரூர் மாவட்டம் புகழூர், புங்கோடை, சேமங்கி, முத்தனூர், பாலத்துறை உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை சாகுபடி ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்படுவது வழக்கம். கடந்த இரண்டு ஆண்டுகளாக காவிரி தண்ணீர் போதுமான அளவுக்கு கிடைக்காததால் சாகுபடி பரப்பு குறைந்து விட்டது. போதுமான அளவுக்கு விளைச்சல் இல்லாதால் பெரும்பாலானவர்கள் நிலத்தை குத்தகைக்கு விடுகின்றனர். குத்தகைக்கு எடுத்த நிலத்தில் வெற்றிலை சாகுபடி செய்கின்றனர். பம்புசெட் தண்ணீரை பயன்படுத்தி சாகுபடி செய்தனர். வறட்சி காரணமாக வெற்றிலைப்பயிர்கள் வாடி வந்தன. முடிந்த அளவுக்கு தண்ணீர் பாய்ச்சியும் ஆற்றில் தண்ணீர் வராததால் நிலத்தடிநீர் மட்டம் குறைந்தது. இதனால் விவசாயிகள் நஷ்டம் அடைந்து வந்தனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் நல்ல விளைச்சல் இருந்த காலத்தில் செதில் பூச்சி தாக்குதல் காரணமாக தண்ணீர் இருந்தும் விளைச்சல் பாதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது இந்த ஆண்டு கடந்த சில மாதங்களாக காவிரியாற்றில் நீர்வரத் தொடங்கியது. தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால் வெற்றிலை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து சாகுபடி பணியில் ஈடுபட்டனர். இளங்கால் வெள்ளைக்கொடி வெற்றிலை 104 கவுளி கொண்ட ஒரு சுமை ரூ.3ஆயிரத்து 500ல் இருந்து, தற்போது ரூ.4ஆயிரமாக விலை உயர்ந்துள்ளது. இதேபோல முதிகால்வெள்ளைக்கொடி ரூ.1500 ல் இருந்து ரூ.2ஆயிரமாகவும், இளங்கால் கற்பூரி ரூ.2ஆயிரத்தில் இருந்து ரூ.2ஆயிரத்து 500ஆகவும், முதிகால் கற்பூரி ரூ.800ல் இருந்து ரூ.ஆயிரமாகவும் விலை உயர்ந்துள்ளது.

## எள் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்

காட்டுமன்னார்கோவில், :காட்டுமன்னார்கோவிலில் கோடை காலத்தில் சம்பா அறுவடைக்கு பிறகு விளை நிலங்களில் எள் பயிரிடுவதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். எண்ணெய் வித்துக்களில் நிலக்கடலைக்கு அடுத்து எள் பயிர் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. மேலும் எள் ஒரு மூட்டை ரூ.5 ஆயிரத்திற்கு மேல் விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் இந்த பகுதியில் பயிர் செய்கின்றனர். கண்டமங்கலம், குருங்குடி, எய்யலூர், ஆச்சாள்புரம் மற்றும் மேலும் பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் தீவிரமாக எள் சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். ஆழ்குழாய் கிணறு வைத்திருப்பவர்கள் கோடை காலத்தில் வயல்களை நன்றாக உழுது எள் விதைப்பு செய்தனர். எள் பயிருக்கு குறைந்த அளவே தண்ணீர் தேவை. இதை கருத்தில் கொண்டு பெரும்பாலான விவசாயிகள் தற்போது எள் சாகுபடி செய்து தண்ணீர் இறைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## கிடங்குகளை பயன்படுத்த விவசாயிகளுக்கு அழைப்பு

கோபி, : கோபியில் நபார்டு வங்கி சார்பில் விவசாயிகளுக்கு கிடங்குகள் பயன்படுத்துவது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. ஈரோடு மாவட்ட பசுமை உழவர் மனற் குழுக்களின் கூட்டமைப்பு சார் பாக கோபி வேளா ண்மை உற்பத்தியாளர்கள் கூட்டு றவு சங்க வளாகத்தில் கிடங்குகள் பயன்படுத்துவது தொ டர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ் தலைமை தாங்கினார். நுகர்பொருள் வாணிப கழக மேலாளர் ராமசுந்தரம் முன்னிலை வகித்தார். நபார்டு வங்கி துணை பொது மேலாளர் சந்தானம் வரவேற்றார். ஹரிதாஸ் வாழ்த்துரை வழங்கினார். கோட்ட பொது மேலாளர் பாலசுப்ரமணியம் சிறப்புரையாற்றினர். அவர் பேசியதாவது: விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கிடங்குகளில் இருப்பு வைத்து விற்பனை செய்வதற்கு முன் தங்களுடைய தேவைக்காக

இருப்பு வைக்கப்பட்டுள்ள பொருட்களின் அளவு மற்றும் மதிப்பிற்கேற்ப சரக்கீட்டு கடனை வழங்க வங்கிகள் தயாராக உள்ளது. இவ்வாறு பாலசுப்ரமணியம் பேசினார். நிகழ்ச்சியில், மாவட்ட பசுமை உழவர் மன்ற குழுக்களின் கூட்டமைப்பைப் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, ஹரிதாஸ், மூர்த்தி, ராஜா, குமரேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் இருந்து 50 ஆயிரம் டன் வெங்காயம் இறக்குமதி மத்திய அரசு நடவடிக்கை**



புதுடெல்லி, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து 50 ஆயிரம் டன் வெங்காயம் இறக்குமதி செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

உள்நாட்டு கையிருப்பு பாதிப்பு

வெங்காய சாகுபடியில் சிறந்து விளங்கும் கர்நாடகம், குஜராத், மத்திய பிரதேசம், மராட்டியம் உள்ளிட்ட மாநிலங்களில், பருவமழை தவறியதால் பருவகால வெங்காய விதைப்பு பணிகள் தாமதமாகி உள்ளது. இதனால்

உள்நாட்டு கையிருப்பு பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த உற்பத்தி பாதிப்பால் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. டெல்லியில் தற்போது ஒரு கிலோ வெங்காயம் ரூ.16 முதல் ரூ.25 வரை விற்கப்படுகிறது. இங்கு தினமும் சுமார் 1000 குவிண்டால் வெங்காயம் விற்பனையாவது குறிப்பிடத்தக்கது.

## இறக்குமதிக்கு அனுமதி

எனவே வருகிற நாட்களில் குறிப்பாக தசரா, தீபாவளி உள்ளிட்ட பண்டிகை நாட்களை கருத்தில் கொண்டு நாடு முழுவதும் வெங்காய தேவையை பூர்த்தி செய்ய மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. மேலும் டெல்லி உள்ளிட்ட பெருநகரங்களில் வெங்காய விலை உயர்வை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய தேசிய வேளாண் மற்றும் சந்தைப்படுத்துதல் கூட்டமைப்புக்கு (என்.ஏ.எப்.இ.டி.) மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் இந்த நாடுகளில் இருந்து 50 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுக்கு வெங்காயம் இறக்குமதி செய்ய அந்த அமைப்பு முடிவு செய்துள்ளது.

## அக்டோபர் இறுதிக்குள்

இந்த வெங்காயம் டெல்லி மாநில அரசின் விருப்பப்படி, டெல்லிக்கு அருகே உள்ள துறைமுகம் அல்லது குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு வரப்படும். வெங்காய இறக்குமதிக்கான கொள்முதல் ஆணைகள் தாமதமின்றி வழங்கப்பட்டால், அக்டோபர் மாத இறுதி அல்லது நவம்பர் மாத தொடக்கத்துக்குள் இறக்குமதி வெங்காயம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டில் வெங்காய உற்பத்தி பாதிப்பால், வழக்கமாக செப்டம்பர் மாத இறுதியில் வரத் தொடங்கும் வெங்காயம், ஒரு மாதம் தாமதமாகவோ அல்லது நவம்பர் மாதத்திலோ சந்தைகளுக்கு வரும் என பெரு வணிகர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளதாக என்.ஏ.எப்.இ.டி. அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>பெங்களூரில் இருந்து லாரிகள் வராவிட்டாலும் கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலையில் மாற்றம் இல்லை பீன்ஸ் ரூ.20–க்கும், முட்டைக்கோஸ் ரூ.10–க்கும் விற்பனை</u>**



பெங்களூரில் இருந்து லாரிகளில் கொண்டுவரப்படும் காய்கறிகள் வரவில்லை என்றாலும், கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலையில் எந்தவித மாற்றமும் இல்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

கோயம்பேடு மார்க்கெட் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தமிழ்நாட்டின் சில பகுதிகளில் இருந்தும், கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களில் இருந்தும் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இந்த நிலையில் நேற்று கர்நாடகா மாநிலம் பெங்களூரில் இருந்து காய்கறி லாரிகள் வரவில்லை என்றாலும் காய்கறிகளின் விலையில் மாற்றம் இல்லாமல் தான் இருந்தது. கடந்த வாரத்தில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலையை விட சற்று குறைந்தே நேற்று காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டது. அதன்படி, கடந்த வாரத்தில் ஒரு கிலோ அவரைக்காய் ரூ.30 முதல் ரூ.35 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் நேற்று ஒரு கிலோ அவரைக்காய் ரூ.25–க்கு விற்பனை செய்யப்பட்டது. அதே போல் கடந்த வாரத்தில் கிலோவுக்கு ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்ட பீன்ஸ், நேற்று ஒரு கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை மிக குறைந்த விலையிலேயே விற்பனை செய்யப்பட்டது. இதுகுறித்து கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்திரராஜன் கூறியதாவது:– லாரிகள் வரவில்லை

இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து காய்கறிகளின் வரத்து அதிகரிப்பால் விலை குறைந்தே காணப்படுகிறது. இந்த நிலையில் ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கு தீர்ப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து, பெங்களூரில் இருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனங்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல், பெங்களூரில் இருந்து கோயம்பேடு மார்க்கெட்டுக்கு பீன்ஸ், முட்டைக்கோஸ், கேரட், பல்லாரி போன்ற காய்கறிகள் தினமும் கொண்டு வரப்படும். ஆனால் நேற்று காய்கறிகள் பெங்களூரில் இருந்து வரவில்லை.

<u>**காய்கறிகள் விலையில் மாற்றம் இல்லை**</u>

பொதுவாக நாளொன்றுக்கு 260 லாரிகளில் காய்கறிகள் மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன. ஆனால் நேற்று 180 முதல் 190 லாரிகளில் தான் காய்கறிகள் வந்தது. இருப்பினும், ஆந்திரா மாநிலம், பழமநேரி, ஒட்டுப்பள்ளி, முல்பாகன் ஆகிய பகுதிகளில் இருந்து காய்கறிகள் வந்திருக்கின்றன. தற்போது பெங்களூரில் தசரா பண்டிகை கொண்டாடப்படுவதால், பொதுவாக அந்த சமயங்களில் தமிழகத்துக்கு அங்கிருந்து லாரிகளில் காய்கறிகள் கொண்டுவருவது குறையும். ஆனால் நேற்று (அதாவது நேற்றுமுன்தினம்) ஜெயலலிதா சொத்துக்குவிப்பு தீர்ப்பு பிரச்சினை காரணமாகவும் சில லாரிகள் வராமல் இருந்தன. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:–

விலை நிலவரம்

தக்காளி – ரூ.18 முதல் ரூ.25 வரை, உருளைக்கிழங்கு – ரூ.30, பீன்ஸ் – ரூ.15 முதல் ரூ.20 வரை, கேரட் – ரூ.40, நூக்கல் – ரூ.16, சவ்சவ் – ரூ.22, பீட்ரூட் – ரூ.15, முட்டைக்கோஸ் – ரூ.10, மிளகாய் – ரூ.20, சேனைக்கிழங்கு – ரூ.18, சேப்பக்கிழங்கு – ரூ.25, கத்தரிக்காய் – ரூ.13 முதல் ரூ.18 வரை, வெண்டைக்காய் – ரூ.15, அவரைக்காய் – ரூ.25, கோவக்காய் – ரூ.20, கொத்தவரங்காய் – ரூ.25, பாகற்காய் – ரூ.25,

சாம்பார் வெங்காயம் – ரூ.35, காலிபிளவர் – ரூ.20, பச்சைப்பட்டாணி – ரூ.60, முருங்கைக்காய் – ரூ.30 முதல் ரூ.50 வரை, முள்ளங்கி – ரூ.25, புடலங்காய் – ரூ.20, பீர்க்கங்காய் – ரூ.20, சுரைக்காய் – ரூ.13, பல்லாரி – ரூ.20 முதல் ரூ.25 வரை, இஞ்சி (பழையது) – ரூ.90, இஞ்சி (புதியது) – ரூ.30. இவ்வாறு அவர் கூறினார்.

**சிறுமலை பகுதியில் பலத்த மழை: குட்லாடம்பட்டி அருவியில் தண்ணீர் கொட்டுகிறது கண்மாய்கள் நிரம்புகின்றன**



சிறுமலை பகுதியில் பெய்து வரும் பலத்த மழையினால் குட்லாடம்பட்டி அருவியில் தண்ணீர் கொட்டுகிறது. இதனால் அந்த பகுதியில் உள்ள கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. அருவியில் தண்ணீர் மதுரை மாவட்டம் வாடிப்பட்டி யூனியன் குட்லாடம்பட்டி பஞ்சாயத்திற்கு உட்பட்ட தாடகைநாச்சிபுரத்தில் இயற்கை எழில் சிந்தும் சிறுமலையின் அடிவாரத்தில் தாடகை நாச்சியம்மன் அருவி உள்ளது. சிறுமலையில் மழை பெய்தால் மட்டுமே இந்த அருவியில் தண்ணீர் விழும். பின்னர் வறண்ட நிலையில் காணப்படும். தற்போது பெய்து வரும் பலத்த மழையினால் அருவியில் தண்ணீர் வரத் தொடங்கியுள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பலத்த ஓசையுடன் அருவியில் வெள்ளம் கொட்டுகிறது. அத்துடன் இந்த பகுதியில் சாரல் மழையும் பெய்தபடியே உள்ளது. கடந்த சில நாட்களாக காலையில் பனிமூட்டம் நிறைந்து காணப்படுகிறது. இதனால் அருவி ஓடையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதன் பயனாக குட்லாடம்பட்டி கண்மாய், கொட்டமடைக்கி

கண்மாய், நாகர்குளம் கண்மாய், கருப்பணமணியக்காரர் கண்மாய் உள்பட பல்வேறு கண்மாய்களுக்கு தண்ணீர் வரத்தொடங்கிய உள்ளது. இதனால் கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. கண்மாய்கள் நிரம்புகின்றன மேலும் அருவியின் மேல் பகுதியில் உள்ள புலியருவியுலும், குலசேகரன்கோட்டை கோம்பைகரடு பகுதியின் பின்புறம் உள்ள மீன்பெட்டி அருவியிலும் தண்ணீர் கொட்டு கிறது. இதனால் இந்த பகுதியில் உள்ள கண்மாய்களும் மாவூர் அணையிலும் தண்ணீர் நிரம்புகின்றது. அத்துடன் குட்லாடம்பட்டி அருவிக்கு அடிவாரத்தில் இருந்து மேலே ஏறிசெல்லும் பாதை சீர்குலைந்து காணப்படுகிறது. இதன் படிக்கட்டுகள் எல்லாம் சிதலமடைந்து உள்ளது. மேலும் அருவியின் அருகில் கைபிடிக்கம்பிகள், தளம் ஆகியவை உருக்குலைந்த நிலையில் உள்ளது. இதனால் அங்கு செல்லும் சுற்றுலா பயணிகள் மிகவும் கவனத்துடன் குளிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. தற்போது தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து வருகிறது. மேலும் அருவிப்பகுதிக்கு மதுபாட்டிகள், பிளாஸ்டிக் பைகள் கொண்டு வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடியில் பணியில் இருக்கும் போலீசார், அருவிக்கு வருவோரின் உடைமைகளை சோதனை செய்து அவற்றில் தடை செய்யப்பட்ட பொருட்கள் இருந்தால் பறிமுதல் செய்த பிறகே ஆட்களை அனுமதிக்கின்றனர்.

## <u>பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி சாகுபடி வயல்களை கலெக்டர் ஆய்வு</u>



பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி சாகுபடி வயல்களை கலெக்டர் தரேஸ் அஹமது ஆய்வு செய்தார். பருத்தி சாகுபடி

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழக அரசின் சார்பில் வேளாண்மைத் துறையின் மூலம் பருத்தி சாகுபடியில் ஒரு ஹெக்டேரில் ரூ.1 லட்சத்து 25 ஆயிரம் வருமானம் ஈட்டவும், மக்காசோள சாகுபடியில் ஒரு ஹெக்டேரில் ரூ.1 லட்சம் வருமானம் ஈட்டவும் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.5ஆயிரம் மதிப்பீட்டில் விதை நேர்த்தி மருந்து, உயிர் உரம், நுண்ணுரம், களைக்கொல்லி மருந்து, உயிரியல் பூஞ்சனக்கொல்லி மருந்து, பூச்சி மற் றும் நோய் மருந்து, ஊடுபயிராக பயிரிட பயிறு வகை பயிர் விதைகள் வழங்கப்படு கின் றன. ஒரு ஹெக் டேரில் ரூ.1.25 லட்சம் திட்டத்தின் கீழ் பருத்தி சாகுபடி செய்ய 1 விவசாயிக்கு 1 ஹெக்டேர் வீதம் பெரம்பலூர் வட்டாரத்தில் 200 விவசாயிகளும், ஆலத்தூர் வட்டாரத் தில் 250 விவசாயிகளும், வேப்பூர் வட்டாரத்தில் 275 விவ சாயிகளும், வேப்பந்தட்டை வட்டாரத்தில் 275 விவசாயிகளும் என மொத்தம் 1,000 ஹெக் டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட் டுள்ளது. மக்காச்சோளம்

ஒரு ஹெக்டேரில் ரூ.1 லட்சம் திட்டத்தின் கீழ் மக்காச்சோளம் சாகுபடி செய்ய 1 விவசாயிக்கு 1 ஹெக்டேர் வீதம் பெரம்பலூர் வட்டாரத்தில் 210 விவசாயி களும், ஆலத்தூர் வட்டாரத் தில் 250 விவசாயிகளும், வேப் பூர் வட்டாரத்தில் 280 விவ சாயிகளும், வேப்பந்தட்டை வட்டாரத்தில் 260 விவசாயி களும் என மொத்தம் 1,000 ஹெக்டேர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. கலெக்டர் ஆய்வு

இந்த திட்டங்களின் கீழ் சாகுபடி மேற்கொண்ட வேப்பந்தட்டை பகுதியை சேர்ந்த விவசாயி ம.மனோகரனின் பருத்தி வயலையும், அருகில் விவசாயி ம.சேகரின் மக்காச்சோள வயலையும் கலெக்டர் தரேஸ் அஹமது பார்வையிட்டு பயிரில் உள்ள இலைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயிரின் வளர்ச்சித்தன்மையை சோதனை செய்தார். இந்த வயலின்

மண்மாதிரி அறிக்கை பெறப்பட்டுள்ளதா? என்றும், வயலின் ஈரப்பதம் மற்றும் மண்வளதரத்தினை சோதித்தார். தொடர்ந்து கிருஷ்ணா புரத்தில் செல்லப் பிள்ளை என்ற விவசாயியின் மக்காச் சோள வயலை ஆய்வு செய்தார். மேலும் அருகில் உள்ள செல்லதுரை என்ற விவசாயியின் பருத்தி வயலை பார்வையிட்டு, அவரது வயலில் வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத் தின் மூலம் வழங்கப்பட்ட உயிரியல் காரணியான பி.பி.எப்.எம் (பிங்க் பிக் மண்டட் கல்டேட்டிவ் மெத்த லோடிராபிக் பாக்டீரியா) கரைசலை தண்ணீருடன் கலந்து தெளிக்கும் செயல் விளக்கத்தினை பார்வையிட்டார். அதிகாரிகள் நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் அழகிரிசாமி, பருத்தி ஆராய்ச்சி நிலையத் தலைவர் கவிமணி துணை இயக்குநர் (வேளாண்வணிகம் மற்றும் விற்பனைத்துறை) சுப்பிரமணி, வேப்பந்தட்டை வட்டார வேளாண்மை அலுவலர் பிரேமாவதி, வேளாண்மை அலுவலர்கள் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## <u>புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நடவு முறை துவரை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறலாம் அதிகாரி தகவல்</u>



புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் நடவு முறையில் துவரை சாகுபடி செய்தால், கூடுதல் மகசூல் மற்றும் வருமானம் பெறலாம் என வம்பன் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் ஞானமலர் தெரிவித்து உள்ளார். ஒரு நாள் பயிற்சி புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு நடவு முறையில் துவரை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி

வம்பன் வேளாண் அறிவியல் நிலை யத்தில் நடைபெற்றது. பயிற் சிக்கு வம்பன் வேளாண் அறி வியல் தலைவர் ஞானமலர் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:- துவரை சாகுபடியில் பருவம் மற்றும் ரகம் தேர்வு மிகவும் முக்கியம். சாதாரண முறையில் துவரை சாகுபடி செய்யும் போது ஏக்கருக்கு 250 கிலோ தான் மகசூல் கிடைக்கும் காரணம் சரியான பராமரிப்பு மற்றும் தொழில் நுட்பங்களை கடைபிடிப்ப தில்லை. ஆனால் நடவு முறையில் துவரை சாகுபடி செய்யும் போது ஏக்கருக்கு 800 முதல் 1000 கிலோ வரை மகசூல் பெறுவதுடன் வருமானமும் பெருகும். இவ்வாறு அவர் பேசினார்.

நடவு செய்யும் ரகங்கள் விதை அறிவியல் துறை வல்லுனர் கதிரவன் பேசுகை யில்:- சரியான பருவத்தில் துவரை நடவு செய்ய வேண் டும். மேலும் பருவத்திற்கேற்ப ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். புரட்டாசி பட்டத் தில் பயன்படுத்தப்படும் ரகங்க கள்: கோ.ஆர்.ஜீ -7, வம்பன் 3, ஏ.பி.கே.1, இந்த ரகங்கள் 110 முதல் 135 நாட்கள் வய துடையது. ஆடிப்பட்டம் கோ-6, ஐ.சி.பி.எல், வம்பன் -2 இரகங்கள் 180 முதல் 200 நாட்கள் வயதுடையது. நாற்றுகள் தயாரிக்க ஏக்கருக்கு 1 கிலோ விதை போதுமானது. 6*4 அளவுள்ள 200 மைக்ரான் தடிமனுள்ள பாலித்தீன் பைகளில் மணல், மண் மற்றும் எருஉரம் ஆகியவற்றை சம அளவில் கலந்து கலவையை நிரப்பி விதை விதைக்க தயார் செய்ய வேண்டும். பாலீத்தீன் பையில் தண்ணீர் தேங்குவதை தவிர்க்க 3 அல்லது 4 துளைகள் இடவேண்டும். ஒரு பைக்கு ஒரு நல்ல விதை வீதம் 1செ.மீ ஆழத்தில் விதைக்க வேண்டும். 30ல் இருந்து 40 நாட்கள் வயதுடைய நாற்றுகளை நடவுக்கு பயன்படுத்தலாம். நாற்றுகள் நடவு செய்ய அரை சதுர அடி குழி எடுக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 5 அடி இடைவெளியும் விட்டு நட வேண்டும். நுனி கிள்ளுதல்

ஒரு ஏக்கருக்கு 2,900 பயிர்கள் பராமரிக்கலாம். பூ பூக்கும் தருணத்தில் 4 கிலோ டி.ஏ.பி. உரத்தை 10 லிட்டர் நீரில் இரவு முழுவதும் ஊற வைத்து

காலையில் மேலே உள்ள நீரை மட்டும் எடுத்து 200 லிட்டர் நீரில் கலந்து இலைகள் நன்கு நனையுமாறு கை தெளிப்பான் கொண்டு மாலை வேளையில் தெளிக்க வேண்டும் என கூறினார். முனைவர் மாரிமுத்து நடவு முறை துவரையில் நுனி கிள்ளுதல் குறித்து கூறுகையில், நடவு செய்த 30-வது நாள் ஒரு முறையும், 45-வது நாள் இரண்டாவது முறையும் நுனி கிள்ளுதல் அவசியமாகும். நுனி கிள்ளுவதால் அதிக அளவில் பக்க கிளைகள் வெடிக்கும். இந்த தொழில் நுட்பங்களை கடைப்பிடிப்ப தன் மூலம் அதிக மகசூல் மற்றும் கூடுதல் வருமானம் பெறமுடியும் என்றார். இந்த பயிற்சியில் வேளாண் அறிவி யல் நிலைய விஞ்ஞானிகள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த விவசா யிகள் பலர் கலந்து கொண் டார்கள்.

## <u>பட்டுவளர்ப்பை அதிகரிக்க விவசாயிகளுக்கு மானியம் கலெக்டர் ராஜாராமன் தகவல்</u>



பட்டுவளர்ப்பை அதி கரிக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது என்று கலெக்டர் ராஜாராமன் கூறினார். தொழில்நுட்ப உதவி சிவகங்கை மாவட்ட கலெக்டர் ராஜாராமன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- சிவகங்கை மாவட்டத்தில் பட்டு வளர்ப்பு தொழிலை அதிகரிக்க பட்டுவளர்ச்சி துறை மூலமாகவும், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் மூலமாகவும் உதவிகள் செய் யப்பட்டு வருகிறது. இந்த மாவட்டத்தில் 150 ஏக்கரில் 90 விவசாயிகள் பட்டு தொழில் செய்து வருகிறார்கள். இவர் களுக்கு புதியதாக மல்பெரி நடவு

செய்ய தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதுடன் தரமான பட்டு முட்டைகளை வழங்கிடவும், வெண்பட்டு கூடுகளை அறுவடை செய்ய வும் உதவி செய்யப்பட்டு வருகிறது. மேலும் பட்டு வளர்ச்சி துறை மூலமாக மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது. பட்டு தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மல்பெரி நாற்று மானியம், சிறு விவ சாயிகளுக்கு முழு மானியத் துடன் சொட்டுநீர் பாசன வசதி, தனி புழு வளர்ப்பு மனை அமைக்க மானியம், புழு வளர்ப்பதற்கான நவீன தளவாடங்கள் வாங்க மானி யம் ஆகியவை பட்டு வளர்ச்சி துறை மூலமாகவும், மாநில சமச்சீர் வளர்ச்சி மூலமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. அரசு மானியம் பட்டு தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தலா ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் வரை அரசு மானியம் வழங்குகிறது. சிவகங்கை மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஆகஸ்ட் வரை ரூ.26 லட்சத்து 25 ஆயிரம் மதிப்பில் 7,500 கிலோ வெண் பட்டு கூடுகள் உற்பத்தி செய் யப்பட்டுள்ளது. இது கடந் தாண்டை விட 2 ஆயிரம் கிலோ அதிகமாகும். மேலும் சிவகங்கை மாவட்டத்தில் ஒ.புதூர் மற்றும் குன்றக்குடி ஆகிய இடங்களில் அரசு செயல்விளக்க பட்டு பண்ணை கள் அமைக்கப்பட்டு விவசாயி களுக்கு உயர்ரக மல்பெரி நாற்றுக்கள் மற்றும் பட்டு தொழில் சம்மந்தமான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது தவிர இளையான் குடி யில் பட்டு வளர்ச்சி துறை உதவியுடன் நகர்புற குடிசை பகுதி அளவிலான கூட்ட மைப்பு மூலம் பட்டு ஏனங்கள் கொண்ட பல முனை பட்டு நூற்பகம் மகளிர் குழு மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த குழுவுக்கு ரூ.10 லட்சம் வரை மானியம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.